

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் தேர்தல் பணிமனையை கழகப் பொதுச் செயலாளர்– அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அமைச்சர் எ.வ. வேலு, மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. தொகுதி பொறுப்பாளர் சுகவனம், ஏ.சி. வில்வநாதன் எம்.எல்.ஏ. வேட்பாளர் கதிர் ஆனந்த், ஆம்பூர் ஆறுமுகம், ஆனந்தன் மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியினர் உடன் உள்ளனர்.



தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (24.03.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 28.03.2024 (வியாழக் கிழமை) | - கரூர்<br>ஈரோடு |
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - கோவை<br>பொள்ளாச்சி |
| 01.04.2024 (திங்கட் கிழமை) | - திருநெல்வேலி<br>தென்காசி |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - கன்னியாகுமரி |
| 04.04.2024 (வியாழக் கிழமை) | - மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | - சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
*'சென்னை-18.*
*நாள் : 24.3.2024.*

**தலைமைக் கழகம்,**
*தி.மு.க.*

## கறம்பக்குடி அருகே கோடை நடவுப்பணிகள் தீவிரம்!

கறம்பக்குடி, மார்ச் 26–

கறம்பக்குடி அருகே இயந்திரம் வாயிலாக கோடை நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே அம்புக்கோவில் கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் அம்புக்கோவில் மற்றும் பிலாவிடுதி பகுதியை சேர்ந்த அம்புக்கோவில் கிராமத்தில் அமைந்துள்ள பெரிய எழும்பி முக்கூர்த்த நாறி போன்ற ஆயக்கட்டு பகுதிகளில் அமைந்துள்ள மற்றும் கூத்தம்பட்டி மற்றும் கூத்தம்பட்டி கிராம பகுதிகளில் அமைந்துள்ள பாசன விவசாய நில பரப்புகளில் வருடம் தோறும் குறுவை, சம்பா, கோடை பருவ காலங்களில் நடவு பணிகள் தீவிரம் அடைந்து வருவது வழக்கம்.

இந்த ஆண்டு கூத்தம்பட்டி அம்புக்கோவில் போன்ற பகுதிகளில் கடந்த சில தினங்களாக கோடை நடவு பணிகள் நடைபெற்று வருகின்றன விவசாயி செந்தில் மற்றும் அவரது சகோதரி மைத்துனர் மற்றும் ஏராளமான விவசாயிகளுக்கு உள்ள 5 ஏக்கர் பரப்பலவில் ஆள் பற்றாக்குறையின் காரணமாக இயந்திரம் மூலம் கோடை நடவு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து விவசாயிகள் கூறும் போது ஆள்பற்றாக்குறையின் காரணமாக இயந்திரம் மூலம் கோடை நடவு பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்று விவசாயிகள் ஓட்டு மொத்தமாக கூறினர்.

## கனிமொழி கருணாநிதி - நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

### எட்டையபுரம் - மதுரை நான்கு வழிச்சாலையில் உள்ள சிந்தலக்கரை மைதானத்தில் நடைபெறுகிறது!

*தூத்துக்குடி, மார்ச் 26-*

*'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி, இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து தி.மு.கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மாபெரும் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். எனவே அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக் குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அழைப்பு விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திலும், இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம்லீக் சார்பில் நவாஸ்கனி அவர்கள் ஏணி சின்னத்திலும் போட்டியிடுகிறார்கள்.*

*இவர்களை ஆதரித்து தி.மு.கழக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 4.30 மணி அளவில் எட்டையபுரம் மதுரை நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள சிந்தலக்கரை கலைஞர் மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகிறார்.*

*இந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

